ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

பரஸ்பரம் ஒற்றுமைப்பட்ட அபிப்பிராயமுள்ளவர்கள் பலவகைப்பட்டவர்களாயினும் ஒரு காரியத்தை ஸாதிக்கச் சேர்ந்து முயற்சிப்பார்களானால் அதை ஸாதித்துவிடலாம். அபிப்பிராயம் ஒற்றுமைப்படாமல் விரோதப்பட்டிருக்கும்போது ஸாக்ஷாத் ஸஹோதரர்களே சேர்ந்துமுயன்றாலும் அதன் பயன் கண்டெடுக்கமுடியாதென்பது மாத்திரமல்ல; விபரீதமாகவும் முடிந்துவிடுமென்பது நீதியறிந்தவர்கள் தெரிந்துகொண்ட விஷயமே. அப்படியிருக்கையில் ஸ்வராஜ்யமென்ற பயனுக்காகப் பாடுபடும் நம் இந்தியவாஸிகளோ ஒற்றுமைப்பட்ட அபிப்பிராயமுள்ளவர்களாக நினைக்கமுடியவில்லை. ஏனெனில் இவர்களிற் சிலர் பரலோகமொன்றுண்டு என்பதையும், அதற்குபிரத்தியக்ஷானுமானாதிகளைத்தவிர வேறொரு பிரமாணமொன்றிருக்கவேண்டுமென்றும், அந்த லோகங்களுக்கும் அவ்வுலகவாஸிகளுக்கும் நியந்தாவாக ஒருவரிருக்கவேண்டுமென்றும் பிரமாணங்களால் நிர்ணயிக்கப்பட்டிருப்பதையும் நினைக்காமலும் அதைப்பற்றி நினைத்தியவர்களது சொல்லைக் கேட்காமலும் தோன்றியபடி பேசுகிறார்கள். வேறு சிலரோவெனில் பரலோகமே பிரதானமெனவும், இம்மைப்பயனைப் பெரிதாக நினைத்து ஜன்மத்தை வீணாக்கிவிடக்கூடாதெனவும் அதற்குப் பிரமாணம் வேதமெனவும் அதிற் கூறியபடிதான் நடக்கவேண்டுமெனவும் அப்படி நடக்க காலதேசாதிகள் ஒத்துவராவிடில் ஸம்பவித்தவரை சரிவர அனுஷ்டித்துவிட்டு முழுமையும் அனுஷ்டிக்கமுடியவில்லையென பச்சாத்தாபத்துடன் அதில் சிரத்தையைப் பாராட்டவேண்டுமெனவும், ஒரே பிடிவாதமாய் நிற்கின்றார். ஆகவே இவ்விருதரத்தாரும் அபிப்பிராயபேதம் உடையவர்களாய்விட்டதிலிருந்து ஒற்றுமையடைய வழியில்லை. இதோர்புறங் கிடப்பினும் சில நாட்களாக மதாசாரவிஷயத்தில் புகுந்து அதை மாற்றவும் நசிப்பிக்கவும் பெருமுயற்சி செய்பவரும் அந்தப் பழைய வழக்கத்தை நிலைநாட்ட முயற்சிப்பவருமாகப் பெரியதோர் சூழ்ச்சியைச் செய்துவருகின்றனர். பரலோகமில்லை, வேதமில்லை, சாஸ்திரமில்லை, தெய்வமில்லை, வர்ணாசிரமாசாரமில்லை, மதமில்லை என்று வாதிப்பவர் ஒரு சிறு வகுப்புக்காரராகவே காணப்படுவதால் பெரும்பான்மையோர் கொண்டுள்ள கருத்தை எப்படி மாற்றமுடியுமென்று சிலர் அங்கும் போகமுடியாமல் இங்கும் வரமுடியாமல் நடுவில் நின்று நடுங்குகின்றனர். தீண்டாமையை யொழித்து வர்ணாசிரமதர்மத்தைக் கெடுத்து அடையப்படும் ஸ்வராஜ்யம் வேண்டவேவேண்டாம். இதற்காகப்பொதுவாக நம் பாரதநாட்டைச் சுட்டிக்காட்டி பாரதமாதாவுக்காகப் பாடுபடுகிறோமென்று சிலர் பாடுபடவும் வேண்டாமென்று ஆர்யர் தீர்மானிக்கின்றனர்.

பத்திராதிபர்.

626

# ஆர்யதர்மம்.

சுக்ல-ஸ்ரூ மார்கழி-மீ ௧௧௳

## தேசநலத்திற்கு தர்மத்தை மாற்றலாமா ?

தேசநலத்திற்காகப் பாடுபடுகின்றவர்கள் அத்தேசத்திற்கும் அதுபோன்ற வேறு அநேக தேசங்களுக்கும் அதிபதியான சக்கிரவர்த்தியின் சட்டதிட்டங்களுடைய நோக்கப்படி பாடுபட்டால் அதன் பயனாக அமையும் தேசநலம் நீடித்து நிலைத்திருக்கும். அப்படிக்கில்லாமல் ஜனஸமூகத்தாராகக்கூடி பலாத்காரமாக ஒரு நலத்தைத் தேடிவைத்தால் அது சக்கிரவர்த்தியின் அந்தரங்கத்திற்கிசைந்ததாயில்லாமையால் ஒருவாறு பலாத்காரமான ஜனஸமூகநிர்ப்பந்தத்தினால் அது மேலுக்கு அங்கீகரிக்கப்பட்டது போல ஏற்றுக்கொள்ளப்படினும் ஒருஸமயத்தில் மாற்றிவிடவேண்டியதாகக் கருதப்பட்டு உபபலம் நேரிடும்பொழுது அடியோடு மாற்றப்பட்டுவிடும். ஆகவே அது நலமாகவே பாவிக்கமுடியாது. நீடித்து நிலைக்கும் நலம்தான் நலமேயொழியக் கண்டதுமழிவதெல்லாம் நலமாய்விடாது. ஆகவே தற்போது ஸ்வாராஜ்யத்திற்காகப் போராடும் கக்ஷியினர்களுக்கு பலாத்காரமென்பதின் மாறுவேஷம் பூண்ட ஸாத்வீகச்சட்டமறுப்பின்மூலம் ஒருவாறு ஸ்வராஜ்யம் கிடைத்துவிட்டாலும் இப்பொழுது "மதாசாரவிஷயத்தில் தலையிடுவதில்லை" என்ற பூர்வீகர்களுடையதும் தன்னுடையதுமான வாக்குறுதியைமீறி விவாஹம் முதலிய மதாசாரத்தில் ராஜாங்கம் தலையிட்டுவிட்டதுபோல் தற்போதுள்ள சில நிர்ப்பந்தத்திற்காகக் கொடுத்த ஸ்வாராஜ்யத்தைப் பிடுங்கிவிட ராஜாங்கத்திற்கு உரிமையும் சக்தியுமிராது என்று நினைப்பதற்கில்லை. ஒரு ஸமயம் வைதிகமதாசாரக்குறைவைக் கருதிய ராஜாங்கம் அதற்கிணங்கிய ஸ்வாராஜ்யக்கக்ஷியின் நிர்ப்பந்தத்தை உறுதிப்படுத்திவிடுமாயினும் இம்மண்ணுலகத்தைப்போல் விண்ணுலகத்திற்கும், எண்ணிறந்த மற்ற உலகங்களுக்கும் ஸ்வதந்திர அதிபதியான பா

மேசுவானது ஆக்ஞாரூபமான வேதசாஸ்த்ரத்தின் நோக்கத்திற்கு அது விரோதமாயிருப்பது பற்றி அந்தர்யாமியான அந்த பரமேசுவானுல் ஒரே ஸங்கல்பத்தினுல் நொடிப்பொழுதில் அந்த வர்ணுசிரமதர்மவிரோதமான ஸ்வராஜ்யமும் பாராஜ்யமும் மாற்றிவிடப் படுமென்பதில் ஸந்தேஹமேயில்லை. இதற்கு உதாஹரணம் நம் பாதபூமியில் இக்கலியிலேயே கண்டழிந்துபோன கணக்கற்ற ராஜ்யங்களே. இது பௌத்த ஜைனுதிகளின் சரித்திரஆராய்ச்சி செய்தவர்களுக்கு உள்ளங்கைக் கனி. தீண்டாமையைக் கற்பித்தவர் மனிதால்ல, தேவால்ல, ஸர்வேசுவானே. அதையொழிக்கத் தலையிட்டால் தீண்டாமையொழித்தலையொழிக்க அவர் ஸங்கல்ப்பிப்பார். அப்படி அவர் ஸங்கல்ப்பிப்பாரா? ஸங்கல்ப்பித்தால் அதுதான் உசிதமாகுமா? அவர் எல்லோருக்கும் பொதுவானவர் அல்லவா? அவரிடம் இவ்விதக் கற்பனையே தகுதியற்றதல்லவா? என்பதாதியாகச் சிலர் கல்லும் கரைந்துருகும்படி கருணையாய்ப் பேசுவார்கள். அது வாஸ்தவந்தான் அவர் இப்படி ஸங்கல்ப்பித்துவிடுவார் என்ற கற்பனை யாரும் கற்பித்ததல்ல. ஆனுலிதை அவரே ஸாக்ஷாத்தாகக் கூறியிருக்கிறுர். அதாவது கீதையில்—

तानहं द्विषतः क्रूरान् संसारेषु नराधमान् ।
क्षिपाम्यजस्रमशुभानासुरीष्वेव योनिषु ॥

"அவ்வாறு என்னை துவேஷிக்கின்ற குரூரர்களான அஸுர ஸ்வரூபிகளாகிய நராதமர்களை (தாழ்ந்த மனிதர்களை) அஸுர யோநியி (பிறப்பி) லேயே தள்ளுகிறேன்."

என்று கூறுகின்றுர். இப்படி ஒருவர் கற்பித்து எழுதிவைத்தது தானேயென்றுல் 'தீண்டாமையொழிப்பதே தேசஸேவை' என்றது தற்காலத்தியவர் கற்பித்து எழுதிவைக்கிற எழுத்துத்தானே? அதுமாத்திரம் அனுதியாயுள்ளதா? அன்றியும் நாம் செய்யும் காரியங்களுக்கு பயனையளிப்பவர் தற்காலத்தியவால்ல. இப்பிரபஞ்சத்தை ஆக்கவும், அளிக்கவும், அழிக்கவும் பூர்ணஸ்வாதந்திரியம் பெற்ற பரமேசுவான்தான் பயனளிப்பவர். சௌசம், ஆசௌசம் முதலியவைகளைப் பிரித்தவர் அவரேயன்றி வேறொருவருமில்லை. அவர் சிலருக்கு ஆசௌசத்தை விதித்திருந்தால் அதை அழிக்க ஒருவனிருக்கிறுனு? தான் அழித்துவிட்டதாக ஒருவன் அகம்

பாவம் கொண்டானேயாகில் அவனகத்தையடக்க அவருக்குச் சக்தியில்லையென்று துணிவது அசட்டுத்துணிச்சலாகும்.

परित्राणाय साधूनां विनाशायच दुष्कृताम् ।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

என்று பிரதிக்ஞைசெய்த ஸர்வக்ஞனுக்கு அது மறந்துபோயிருக்குமென்று நினைக்க இடமில்லை. ப்ரம்மதேவரது ஐம்பத்தோராவது ஆண்டின் முதலாவது நாளின் பகலாகிய இச்சமயத்திற்குக் கீழ்ச்சென்ற எவ்வளவோ சதுர்யுகங்களில் ஒரு சதுர்யுகத்தின் பத்தில் ஒரு பாகமான இந்தக் கலியுகத்தில்மாத்திரம் முந்திய கலியுகங்களைவிட அதிகமான விசேஷம் யாதொன்றுமிருக்க நியாயமில்லை. பிரகிருதமான வைவஸ்வதமன்வந்தரத்தில் கீழ்க்கடந்த 27-கலியுகங்களில் அழிபடாமல் நாளதுபரியந்தம் நீடித்துவந்த வர்ணாசிரமதர்மத்தையும் ஜாதிபேதத்தையும் அழித்துவிட யாராலும் முடியாது. வருங்காலத்தில் எவ்வளவோ மன்வந்தரக்கணக்காக நிலைபெற்றிருக்கப்போகிறதேயன்றி அல்ப்பாயுஸ்ஸாகப் போகக்கூடியதல்ல. இதெல்லாம் கட்டுக்கதைதானேயென்றால் இப்படி வாதிப்பவர் கூறுங் கதையெல்லாம் வெட்டிக்கதையேயன்றி வேறல்ல. ஜாதியையொழிக்க முயலுகிறவர்களும் அவர்களெடுத்த கக்ஷியை ஸ்தாபிப்பதற்காக சிபிசக்கிரவர்த்திகதை,நளசக்கிரவர்த்தி கதை முதலிய கதைகளைச் சில விஷயத்தில் பிரமாணமாகக் கொடுக்கின்றார்களே. அந்தக் கதைகளிலேயே அந்த மன்னர்கள் வர்ணாசிரமதர்மத்தைப் பரிபாலித்த கதையும் ஜாதிபேதத்தை ஸ்தாபித்த கதையும் விரிவாகக் கிடந்துள்ளது இவர் கண்ணிற் படாமற்போனது என்னையோ தெரியவில்லை. அசக்கியமான காரியங்களில் தலையிட்டு ஏதோ சில சுயநலத்தைக் கருதி தேசத்திற்குழைப்பதுபோல் வஞ்சித்துவரும் வஞ்சகர்களுடைய சூழ்ச்சியில் அகப்படாமல் பரமேசுவராக்ஞைக்கடங்கியே நின்று யாவரும் சிரேயஸ்ஸையடைவார்களாக.

சுபம். பத்திராதிபர்.

# கலிவைபவம்.

பிரியநேசர்களே!

இத்தேசத்தைப் புண்ணியபூமியென்றும், க்ஞானபூமியென்றும் சர்வஜீவர்களும் தத்தம் கர்மபலத்தை அனுபவிக்கும் பொருட்டு ஜென்மமெடுப்பதற்குரிய தேசமென்றும் ஈச்வராபிமுகமாய்ப்பிரவர்த்தித்துள்ள ஒவ்வொரு முமுக்ஷுவும் தாமடைய விரும்பும் மோக்ஷபதவியை எளிதில் ஸாதிப்பதற்கு வந்தடைய வேண்டிய பூமியென்றும், சாந்தம், கருணை, பரிசுத்தம் தபஸ், க்ஞானம், தர்மானுஷ்டானம், வேதம் ஓதுதல் இது முதலியவற்றால் மேன்மை வஹித்து விளங்கும் மகரிஷிமண்டலத்தை உடைய தேசம் என்றும், சமயபக்தியுடைய நாடென்றும் போற்றப்படுவதெல்லாம் கலிகாலவைபவத்தால் எண்ணமாத்திரமாகவேமுடிந்துவிட்டது. அந்தோ! என்ன விந்தை இது!! ஸநாதன தர்மமாகிய நமது மதமானது க்ஞானபாகமென்றும், கர்மபாகமென்றும் இருபகுதியுடையது. க்ஞானபாகமென்பது ஆத்மலக்ஷணம், ஈச்வரலக்ஷணம், ஜீவேசுவர சம்பந்தம், சக்தியுபாயம் முதலியவற்றைப்பற்றி கூறுவதாகும். கர்மகாண்டமோ நமக்குச் சிறப்புவகையாய் அமைந்துள்ள ஆஹார வியவஹார, விவாகாதி ஆசார, அனுஷ்டான முறைமைகளைப் போதிப்பதாகும். இப்படிப்பட்ட தர்மபூமியிலே லோகாயதமதமென்னும் அக்கினிஜ்வாலை மேற்றிசையார் ஆசாரசீர்திருத்தக்காரர்கள் இவர்களின் உபன்யாஸம் என்னும் காற்றின் சம்பந்தத்தால் கொழுந்துவிட்டெரிந்து ஸநாதனதர்மிகளை அடியோடு அழித்துவிட்டது. பிராசீனகாலம்முதல் அறம், பொருள் இன்பம், வீடு என்னும் சதுர்விதபுருஷார்த்தங்களுக்கும் பிறப்பிடமாயுள்ளதும், மஹரிஷிகளின் பாதாரவிந்தங்களால் பவித்ரமாயுள்ளதுமான நமது ஆர்யாவர்த்தமும் அனார்யர்களால் அடியோடு அழிந்துவிட்டதே!

நமது பாதநாட்டின் நிலை இங்ஙனம் தீனஹீன ஸ்திதியில் இருக்கும்படிநேர்ந்ததை நெடுங்காலமாய் பல இன்னல்களை அனுபவித்தும் நாம் அனுதாபத்தை அடையவில்லை. நமது புராதன ஆசாரங்களும் $\frac{3}{4}$ நூற்றாண்டாக சீர்திருத்த சங்கங்களால் துர்பல

ஸ்திதியை அடைந்துவிட்டன. அச்சங்கக்காரர்கள் கைக்கொண்ட சாதனங்களனைத்தும் நமது ஆரியாவர்த்த ஆசாரங்களையழிக்க மாத்திரம் சக்தியுற்றனவாயிருந்தனவேயன்றி அவ்வாசாரங்களின் ஸ்தானத்தில் வேறு யாதொரு நூதன ஆசாரங்களையுமுண்டாக்க சக்திபெறவில்லை. மேலும் தமது மதத்தைக் காப்பாற்ற வேத வாக்கியங்களுக்கு வேறு அர்த்தம் செய்வதும் அல்லது மற்ற எவ்வித அயோக்யத்தனமான குயுக்தி செய்வதும் மகரிஷிவம்சத்தில் ஜனித்த நம்மவரில் சிலரும் தலைப்பட்டுவிட்டனர். வாசகர்களே! சாஸ்திரவிஷயங்களில் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகளை எக்காலத்தும் எதிர்க்கமுடியாத நம்மதத்தை ஸ்தாபித்த மகரிஷிகளைத் தலைவர்களாகப் பாவித்து, வந்தித்து வாழ்த்துவோமாக. தற்கால ஐரோப்பிய சாஸ்திர ஆராய்ச்சிகளெல்லாம் நமது முன்னோர்களால் பல யுகங்களுக்கு முன்னமேயே தங்கள் ஞானசக்தியினால் கண்டுபிடிக்கப்பட்டனவென்பதை மறக்கக் கூடாது. அயல்நாட்டார் ஆரியர்கள் எல்லோரையும் ரஹஸ்யமாகவும், பஹிரங்கமாகவும், சட்டமூலமாகவும் இழிவுபடுத்துவதற்கு காரணமாகிய அபாஸங்களுக்கெல்லாம் மூலஸ்தானம் நாமே என்பதை வெட்கத்துடன் ஒப்புக்கொள்ளவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இந்நாட்டிலுள்ளவர்களின் மேல் ஏற்பாட்டிற்கும் பல அக்ரம நிந்தைகளுக்கு நாமே காரணபூதரானோம். இனி நாம் இத்தகைய குற்றங்களுக்கெல்லாம் காரணம் நாமே என்பதை அறிந்து நம்மை ரக்ஷித்துக்கொள்வதற்காக நமது மதத்தின் உண்மையை அறிந்து உய்யும்படியும் செய்யவேண்டும். தேசாபிமானம், ஒற்றுமை, நம்பிக்கை, இவைகொஞ்சங்கூட இல்லாமல் அன்னிய தேசத்தாருடைய அடிகளில் அடிமைகளாக அடங்கிக் கிடக்கும் இந்நாடு சுய ஆக்ஷியுடன் விளங்குவதற்கு நமக்குள் இருக்கும் குற்றங்களை விலக்கிக்கொள்ள வேண்டாமா? ஆகவே நமது நாட்டில் தற்காலம் நேர்ந்திருக்கும் துராசாரங்களை சங்கிரஹமாக பிரசங்கிப்பாம். கலி வைபவத்தால் பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற வியவஸ்திதபேதம் அனேக நூற்றாண்டுகளாக அகன்றுவிட்டது என்பது வெளிப்படை. தாழ்ந்த வகுப்பு ஸ்திரீகளிடத்தில் பிராமணர்களும், பிராமணஸ்திரீகளிடத்தில்சூத்திரர்களும், சம்பந்தம் வைத்துக்கொண்டதனால் உலகமே ஸங்கா

ஜாதிமயமாக ஆய்விட்டது. கள் குடிப்பதும், தாசி கமனமும், சிங்காரமாகப் பாடுவதும், அதிகமாய் பரவி விட்டது. சுருதி ஸ்மிருதிகளும், குருகுலங்களும், ஆச்ரமதர்மங்களும், வேதாத்தியயனமும், பிராணாயாமமும், தபஸ்களும், ஸித்திமார்க்கங்களும், ஐயோ இருந்தவிடம் தெரியவில்லையே!

கலிபுருஷனின் அரசாக்ஷியில் நமது ஆரியச்சிறுவர்கள் சாப்பாட்டுக் கடைகளிலும், சத்திரங்களிலும் சமயல் பண்ணுவதும், சவிண்டிச்சோறு உண்ணுவதும், சோத்துக்கடை வைப்பதும் இழிவான தொழில்களைச் செய்வதுமாக காலம்கழித்து வருகின்றார்கள்.

(தொடரும்)

V. ஜகதீசுவரசாஸ்திரிகள்,
ஸ்ரீமடம் உபன்யாசகர்

---

# ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு.

ஏற்கனவே யான் எடுத்துக்கொண்ட "விவாஹவயோநிர்ணயம்" என்னும் வியாஸத்தை ஜனமித்திரனில், வேதம் முதலானப் பிரமாணங்களில் நம்பிக்கையும், அறிவும், அநுட்டானமும் சிறந்து விளங்கும் பெரியோர்களின் கருத்தையே மூலமாகக்கொண்டு, வெளிவருவதாக பத்திரிகை நேயர்கள் அறிந்திருப்பார்கள்.

முன்னொரு வியாஸத்தில் "ஓர் அறிவிப்பு" என்ற விஷயத்தில் சில வாதிகளின் மொழிகள், சாஸ்திரிகள், மடாதிபதிகள் முதலான பெரியோரிடத்தில் ஒழுங்கீனமாக உபயோகப்பட்டிருப்பது நன்றன்று என்று காரணத்துடன் கூறி, இதேமாதிரி எழுதுவதற்கு இடங்கொடாமலிருந்து எனது "விவாஹவயோ நிர்ணயம்" என்ற வியாஸத்தை முடிவுபெறும்வரை பார்வையிட்டு முன்னோர்களின் நோக்கத்தை ஐயமற அறிந்துகொள்ளவேண்டும் என்று எழுதி உள்ளேன்.

ஆயினும் சென்ற கார்த்திகை-மீ 14-வயில் ஜனமித்திரனில் வெளிவந்த "பால்யவிவாஹ நிக்ரஹச்சட்டம்" என்ற வியாஸத்தைப்பார்க்க ஓர் புறம் கலிகாலவிந்தையும், முன்னோர்களின் உண்

மையான நெறியில் பற்றுள்ளவர்களுக்கு ஓர் மனக்கொதிப்பும் உண்டாக இடமிருக்கிறது.

இம்மாதிரி வியாஸங்களால் மஹாதபஸ்விகளான நம்முன்னோர்களுக்கு குறைகூறத் தலைப்படுகின்றவர்கள் எங்கேயிருந்து குதித்தனரோ தெரியவில்லை. யோசிக்குமிடத்து அம்மாதிரி அடமாய் கூறுவது அவர்களுக்கு சாலவும் பொருந்தாது. அவர்களும் முன்னோர்களின் குலத்திலிருந்தே உண்டாயிருப்பதால் அவர்களுக்கும் அது ஒவ்வாததே. ஒருசமயம் ஸ்வதேசபாஷை, பழக்கம், பெரியோரிடம்நடந்துகொள்ளும் மாதிரி முதலானவைகளில் அனுபவமில்லாமல் செய்யும்படி காலதோஷத்தால் ஏற்படுகின்ற பரதேசிகளின் பாஷை, நடவடிக்கை முதலானவைகளின் பழக்கத்தால் இவ்வாறு எழுதுவதற்குத் தோன்றலாம். அல்லது இக்கலியிலும் வேதாதிப் பிரமாணங்களை திடமாக நம்பி, ஒவ்வொரு கிராமங்களிலும் வர்ணாசிரமப்படி தர்மானுஷ்டானஞ் செய்பவர்களை உத்ஸாகப்படுத்த முன்வரும் மஹான்களுக்கு ஆக்ரோசத்தை உண்டாக்கினால் அடிக்கடி பத்திரிகையையே வேதவாக்கியமாக நம்புகின்றவர்களுக்கு அம்மஹான்கள் எழுதத் தொடங்குவார்கள். அதனால் அவநம்பிக்கை உள்ளவர்களும்ஒருவாறுவர்ணாசிரம தர்மங்களை நன்கறிந்து முன்னோர்களைப் பின்தொடரட்டும் என்ற கருத்தைக்கொண்டோ எழுதுகின்றனர் போலும்.

ஆகையால் பத்திரிகைநேயர்களோ, அல்லது பண்டைய கபடமற்ற ஆஸ்திகமார்க்கத்தை மறுத்து எழுதத்தலைப்படுகின்றவர்களோ வியாஸம் எழுதுவதில் துராக்ரஹம் வைக்காமல் நியாயத்தை ஏற்றுக்கொண்டு அதன்படி ஒழுகவேண்டும் என்று தொடக்கத்தில் அறிவித்துக்கொள்கிறேன்.

ஷை வியாஸத்தில் கண்ட சில அடாதமொழிகளைக் குறிப்பிட்டு கிரமமாய் பதில் கூறுகிறேன்.

1. வர்ணாசிரமிகள் அதிகக்கூச்சல்போட ஆரம்பித்துவிட்டார்கள்.

2. குருட்டுத்தனமான நம்பிக்கை உடைந்துபோய்விடும்.

3. வைதிகத்தொழிலாகக் கொண்டவரும்

4. பழைய நூல்களைப் படித்திருப்பதாக மதிக்கப்பெற்றிருக்கும் படிப்பாளிகளும்.

5. அவர் கிளிப்பிள்ளைகளைப்போல் சொன்னதைச் சொல்லும் யோக்கியதைமட்டில் உடையவர்.

6. சரித்திர ஆராய்ச்சியின் எதிர்நிற்காத படிப்பு.

7. பிறட்டானவசனங்களை எடுத்துச்சொல்வதற்குப் புராணங்கள் இடங்கொடுக்கின்றன.

8. ஸமாவேசனம், கர்ப்பாதானம் என்று கூறப்படும் புணர்ச்சி செய்யவேண்டும் என்று அறநூல்கள் விதிக்கின்றன.

என்பனபோன்ற இன்னும் அனேக மரியாதைக்குறைவான சொற்கள் காணப்படுகின்றன.

இவைகள் யாவும் நன்றல்ல என்று சென்ற கார்த்திகை-மீ 21உ வெள்ளிக்கிழமையில் வெளிவந்த ஆஸ்திகஸநாதன தர்மமகாநாடு என்ற வியாஸத்தால் அறிஞர்கள் தெரிந்துகொண்டிருப்பார்கள். ஆயினும் தொடங்கிவிட்டபடியால் இங்கு அவைகளுக்குப் பதில் கூறுகிறேன்.

1. இவ்வாறு எழுதுகின்றவர்கள் வர்ணாசிரமிகளில் சேர்ந்தவரா? இல்லையா? சேர்ந்தவரென்றால் இந்த நிந்தைமொழி அவர்களையும் சாருமல்லவா? இல்லையெனில் அவர்களுக்கு தர்மோபதேசம் பண்ணுவதில் யாது பயன்? வாஸ்தவமான வர்ணாசிரமிகள்தான் கவலைகொண்டு இச்சட்டத்தை அநீதிகாமென்று நம்பி அதைத் தொலைக்கப் பாடுபடுவார்கள். கூச்சல் என்ற சொல்லுக்கு என்ன பொருள்? பரிஹாஸமொழியானால் அவர்களின் வாக்கால் வர்ணாசிரமிகளின் சொல் கூச்சல் என்று பிரமாணங்களைமுன்னிட்டுக்கூற சாத்தியப்படாது. அப்படிச்சொல்லத் துணிகின்றவர்கள் நன்கு ஆராய்ச்சிசெய்தால் அப் பரிஹாஸமொழி அவர்களையே சாரும். வர்ணாசிரமதர்மங்களை உள்ளபடி அறிந்து அநுட்டிக்க யோக்யதையும் ஆஸ்திக்யமும் இல்லாத பிறநாட்டார்களின் (Translation) மொழிபெயர்ப்பைப் பார்த்துத் தெரிந்துகொண்டதாக தற்புகழ்ச்சிசெய்துகொள்கிறவர்களல்லவா பிரமாணங்களை முன்பின் அறியமுடியாமல் சொல்வதால் அவ்விதமாகும்.

2. குருட்டுநம்பிக்கை என்பதற்கு என்னபொருள்? தோன்றினபடி பிதற்றுகிற நாகரீகர்களின் சொல்லல்லவோ அவ்விதமாகும். பரமேச்வரனின் அநுக்கிரஹம் பெற்று ஞானக்கண்ணால் மூன்று காலங்களையுமறிந்த மனு, வஸிஷ்டர் முதலான மகாமுனிவர்களால் வெளியிடப்பட்ட வேதமூலங்களான ஸ்மிருதிகளல்லவா தலைமுறை தத்துவமாய் நம்மவர்களால் கொண்டாடப்பட்டு, அவைகளின்படி ஆசாரவியவகாரங்கள் பிழைபறச் செய்யப்படுகின்றன. ஆகையால் வர்ணாசிரமிகளுக்குக் குருட்டுநம்பிக்கை எனக் கூறுவது கனவிலும் பொருந்தாது.

3. வைதிகத்தைத் தொழிலாகக் கொண்டவரும் என்பதற்கு என்ன கருத்து? இப்படிக் கூறுகிறவர்களும் ஏதோ ஒரு தொழிலைப்பற்றிக்கொண்டே இருக்கின்றனர் என்று தலையங்கத்தாலேயே செவ்வெனக் காணப்படுகின்றது. அத்தொழிலைவிட, ஸ்வல்பலாபத்தாலேயே திருப்தியடைந்து மேல்நாட்டு நாகரீகத்தால் தர்மங்கள் அறிய சந்தர்ப்பம் பெறாததால் குருட்டுக் கண்ணர்களாகக் கூறுவதற்கு உள்ள நிலைமைபெற்றவரையும் கௌணபக்ஷமாகவாவது தர்மங்களை நடத்தச்செய்துவரும் வைதிகர்கள் உத்தமர்களல்லவா? அவர்களும் பணப்பேராசை பிடித்து இங்கிலீஷ் படித்து அஸத்தியமார்க்கத்தைக் கைப்பற்றிவிட்டால் நமது மதத்திற்கே தர்ப்பணாஞ்ஜலி செய்யவேண்டியதாகும் என்று முன்னமேயே கூறியிருக்கிறேன்.

4. பழைய நூல்களைப் படித்திருப்பதாக மதிக்கப்பெற்ற படிப்பாளிகளும் என்ற வாக்கியத்தில் படிப்பாளிகள் என்றுவது ஒரு நல்ல சொல் கலந்திருக்கிறது. ஆனாலும் பழையநூல்களைப் படித்திருப்பதாகஎன்ற வார்த்தையால் பழையநூல்களான வேதாதிகளுக்கே, மேன்மையோ சிறுமையோ இருவிதமாயும் தோன்றும்படி இருக்கிறது. மேன்மையாகக் கருதினால் வேதசாஸ்திரமறிந்தவர்களிடமிருந்தல்லவோ அதன்கருத்தை யறியவேண்டும். சிறுமையாக நினைத்தால் அவர்களுக்கு யாவராலும் தெளியப்படுத்தமுன்வரமுடியாது.

5. அவர் கிளிப்பிள்ளைகளைப்போல் சொன்னதைச் சொல்லும் யோக்யதை மட்டில் உடையவர் என்பது யோசிக்குமிடத்

துப்பெருமையாகவே ஆகும். வேதப்பிரமாணத்துக்குக் கட்டுப்பட்டுச்சொல்வதால் ஒரே தீர்மானமாகத்தான் வர்ணாசிரமிகள் சொல்வார்கள். அவைகளுக்கு அநுகுணமாகவே தூராக்ஷேபிகளுக்கு யுக்திகளாலேயும் பதில் கூறுவார்கள். ஆர்யதர்மம் முதலான மதப்பத்திரிகைகளை வாங்கிப்பார்த்தால் அஃது நன்று புலப்படும். காலத்திற்கேற்ற கோலம்என்றபடி பிறமதஸ்தர்கள் நம்மை ஏளனம்பண்ணி ஏதாவது ஒன்றை முன்பின்னறியாமல் மேல் பார்வைக்கு தோஷம்போல் படும்படி மேயோ முதலானவர்களின் புத்தகங்களை வெளியிட்டால் அதற்குத் தகுந்தபடி ஆங்கிலத்தில் பதிலுரைக்க சக்தியிழந்து நம்மவரையே திட்டத்தலைப்பட்டவர்களல்லவா கிளிப்பிள்ளைகள் போல் பிறரின் சொல்லைப் பின்பற்றுகிறார்கள்.

6. சரித்திர ஆராய்ச்சியின் எதிர்நிற்காத படிப்பு என்பதற்கு என்ன பொருள்? சரித்திர ஆராய்ச்சி பண்ணினவர்கள் எவர்கள்? என்ன ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது? அவ்வாராய்ச்சிக்கு யாது பிரமாணம்? என்று கேட்கத் தொடங்கினல், பழிகூறுபவர்களின்படிப்பே வர்ணாசிரமிகளுக்கு முன்பு உபயோகப்படுத்தத் தகாதது. புருஷனுடைய புத்தி ராகத்வேஷங்களுள்ளதாயிருப்பதால் பௌருஷேயயான ஆராய்ச்சியிலேதான் ராகத்வேஷங்கள் குவிந்து முன்பின் முரண்பட்டிருக்கின்றன.

வர்ணாசிரமிகள், புருஷனல் ஆக்கப்படாததால் அபௌருஷேயமென்று சொல்லப்படுவதும், மூச்சுக்காற்று விடுவதுபோல் பகவானுடைய முகாரவிந்தத்திலிருந்து அநயாஸமாய் முன் முன் கல்பங்களுக்கேற்பட்டபடி மாறுபாடில்லாமல் ஒரேவிதமாய் வெளிவந்ததுமான வேதத்தையல்லவா பிரமாணமாகக் கூறுகின்றனர். அதில் ராகத்வேஷங்களுக்கு அவகாசம் ஏது? மேலும் அதன் பொருளை தவத்தால் கண்டறிந்த ஸ்மிருதி கர்த்தாக்களல்லவோ அவர்களுக்கு தத்வத்தை வெளிப்படுத்துகின்றவர்கள். யுக்தியால் விதண்டாவாதம் பண்ணுவதால் உண்மை வெளியாகாது என்று வேதவியாஸரே "தர்க்காபிரதிஷ்டானத்" என்று பிரும்மசூத்திரம் செய்திருக்கிறார். அதற்கு நமது பரமாசார்யாள் விரிவாக சாரீரகபாஷ்யத்தில் பொருள்கூறியுள்ளார்கள்.

7. பிறட்டான வசனங்களை எடுத்துச் சொல்வதற்குப் புராணங்கள் இடங்கொடுக்கின்றன என்பது பொருந்தாது. உபக்கிரமோவஸம்ஹாரம் என்ற மீமாம்ஸாநியாயமறிந்தல்லவோ பொருள் கூறவேண்டும். அப்படியறியாமல் புராணங்களுக்கு அர்த்தம் சொல்வதற்குப் புகுந்தவர்களுடைய அறிவில்லாமையல்லவா அம்மொழிக்குப் பாத்யமாகும். வேதார்த்தத்தை அறிவிக்க, இதிஹாஸங்கள் புராணங்கள் ஏற்றவைகள் என்று பாரதம் கூறுகின்றது. 'சிறிது கற்றவன் எனது அர்த்தத்தைக் கெடுத்துவிடுவான்' என்று வேதமே அறிவிக்கிறது.

बिभेत्यल्पश्रुताद्वेदः मामयं प्रतरिष्यति ।
इतिहासपुराणाभ्यां वेदं समुपबृंहयेत् ॥ इति ।

நமது பரமாசார்யாள் முதலான மஹான்கள் புராணங்களை அங்கங்கு ஆதாரமாகக் கையாண்டிருக்கின்றனர். ஸ்வரூபாக்கியானத்தால் பிறரின் சங்கையும், ஸமாதானமும் தெளிவாகும்படி முன் வியாஸத்தில் ஜைமித்திரனில் நன்கு வெளியிட்டுள்ளேன். ஆகையால் பிரமாணத்தை நம்பாமல் தோன்றினபடி பேசுகிறவர்கள்தான் ராகதுவேஷமுள்ளவர்களாய் காணப்படுவதால் பிராமாணிககோஷ்டியிலிருந்துவிலக்கப்பட்டவர்களாவார்கள். இஹத்துவிஷயமோ பரலோகத்துவிஷயமோ யாவற்றையும் நமது பண்டைய நூற்கள் நன்றாகவெளியிடுகின்றன.

8. ஸமாவேசனம் கர்ப்பாதானம் என்று கூறப்படும் புணர்ச்சி செய்யவேண்டுமென்று அறநூல்கள் விதிக்கின்றன என்று எழுதினவர்கள் அந்த அறநூலை எடுத்து பொருள் கூறட்டும். அதற்கு விடையளிப்போம். அவர்கள் கருதும் மந்திரம் ஒரு ஸம்ஸ்காரத்திற்காக ஏற்பட்டது மந்திரஜபமேயல்லது ஸம்போகமென்று ஒரு கிரியையை வெளிப்படுத்த வந்ததல்ல. அப்படியானால் அதே ஸூத்திரத்தில் ( अन्योवाएनामभिमन्त्रयेत् ) 'அன்யோவாஏனாமபிமந்திரயேத்' என்ற வாக்கியத்திற்கு என்ன பொருள்? ஏதாவது ஸௌகர்யத்திற்குக் குறைவு ஏற்பட்டால் வேறு யாராவது இந்த மந்திரத்தை உச்சரிக்க வேண்டுமென்றல்லவோ பொருள். அவர்கள் சொல்லியபடி ஸம்போகம் என்று அர்த்தங்கொண்டால் பதியில்லாத எவனோ ஒருவன் அந்த கார்யத்தைச்செய்யலாம் என்று

ஏற்படும் எந்த மதியீனன் தான் அவ்விதம் செய்யத் துணிவான். ஆகையால் இம்மாதிரி முன்பின் அறியாமல் வேதத்தை நம்புவது போல் ஒரு சமயம் பாசாங்குபண்ணுகிறவர்களும், மேல்பார்வையில் தங்களுக்கு அனுகூலம் போல் தோன்றும் வாக்கியங்களை மட்டிலும் எடுத்துக் கூறுகிறவர்களும் சாஸ்திர ஆராய்ச்சி செய்கிறவர்களின் கோஷ்டியில் முன்னின்று வாதம்பண்ணினால் ஒழுங்காகும். பத்திரிகைகளில் சப்தஜாலங்களை இரைப்பதால் வர்ணாசிரமதர்மங்களைக்கெடுத்துவிடலாம் என்பது முடியாது. பகவத்கீதையை நித்தியமும் படிக்கிறீர்களே? "அதர்மங்கள் வெளியில் பாவும்போது அவதாரம்பண்ணி தர்மங்களை நிலைநாட்டுகிறேன்" என்ற பொருளுள்ள ச்லோகங்கள் தங்கள் போன்றவர்களுக்குத் தென்படவில்லையா?

சாஸ்திரரீதியாக தங்களைக்காட்டிலும் கேள்விகளும் சமாதானங்களும் தெரியவேண்டுமானால் பத்திரிகைகளில் எழுதுவதை விட்டு வயோநிர்ணயம், பரிணயமீமாம்ஸா என்ற நூல்களைப் பண்டிதர்கள் மூலமாய் ஆராய்ச்சி செய்யுங்கள். அதனால் வாஸ்தவார்த்தங்களைத் தெரிந்து லோகத்திற்கு நல்லவழியில் பாடுபடுங்கள் என்று மித்திரனாகவே அறிவிக்கிறேன்.

K. V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்.

---

# கலிகால கோலாஹலம்.

பிரகிருதத்தில் எங்கும் தாண்டவமாடும் சாரதாசட்டத்தைப் பற்றி அநுகூலம்போல் நியாய அநியாயங்களை எடுத்துரைப்பதற்கு வெளிவந்தவர்கள் பலராயினும் ஒழுங்காக நிலைநாட்டத் தலைப்படுகிறவர்களாகக் காணப்படுகிறவர்கள் சிலரே. சாரதா சட்டம் காலத்திற்கேற்றவாறு அநுகூலமே விளைவிக்கப்போகின்றது என்று குருட்டுத்தனமாயும், அடமாயும் பேசுவதோடுநில்லாமல் பத்திரிகைகளில் முன்னோர்களையும் மதியீனர்களென்று நெஞ்சந்துணிந்து வரைகின்றவர்களை இனி அவ்விதம் எழுதாது அடங்கிவிடும்படி செய்யத்துணிகின்றவர்கள் சிறிதுபேர்கள்கூடக்காணப்படவில்லை. ஜனமித்திரனில் நவம்பர் 29உயில் "ஸநாதன தர்மம் யாது" என்று

காணப்பட்ட வாக்கியங்களை விமர்சித்துக்கண்டனம்பண்ணி எழு தினதை பத்திராதிபர் அவர்கள் மேன்மேலும் எழுதிவரும்படி நேர்வதால் கலஹம் வளர்வதற்கு இடமாகுமென்று நிறுத்திக் கொண்டேனென்று எனக்கு எழுதிவிட்டதால் என்னுடைய விஷயம் அப்பத்திரிகையிலேயே வராமலிருக்கும்படி நேர்ந்ததில் ஒருவாறு மனத்தாங்கல் ஏற்பட்டது. ஆனாலும் ஆர்யதர்மம் என்ற பெயரை பொருள்பொருந்தினதாகச் செய்துகொண்டு பிறருடைய ஆபாஸமான நிந்தைமொழிகளைக் களைவதில் ஊக்கத்துடன் வெளியாக்கப்பட்ட மறுப்பைப் பார்த்தபிறகு எனக்கு அந்த மனத்தாங்கல் ஒருவிதமாக சிறிது சாந்தமாயிற்று.

இம்மாதிரி ஆர்யதர்மத்தில் எழுதிவருவதோடு நில்லாமல் மற்ற பத்திரிகைகளிலும் மறுப்பு எழுத முன்வரவேண்டும். மற்ற பத்திரிகைநேயர்கள் அனேகமாய் வைதிகபிரமாணத்தை எழுதினால் பிரசுரிக்க முன்வராததோடு ஆபாஸமான நாஸ்திகத்தன்மை வாய்ந்த விஷயங்களையே பெரும்பாலும் வெளியிட குதூஹலம் அடைகின்றனர். இது கலியின் கோலாஹலமே.

இக்கோலாஹலம் சாஸ்திர ஆராய்ச்சிக்கு முன்னில்லாது. ருதுமதீவிவாஹத்திற்குச் சாதகம்போல் வெளிப்பார்வைக்குத் தோன்றும் விஷயங்களை எடுத்துக்கூறி அவர்கள் அதோடுதிருப்தியடைந்துவிடுகிறார்கள். முன்பின் விரோதத்தைக் கவனிக்கின்றார்களில்லை. தங்களுக்குத் தோன்றும் ஆபாஸயுக்திகள் சில தோன்றினவுடன் வேதாகமப் பிரமாணமே தங்களுக்குச் சாதகமென்று ஆரவாரஞ்செய்கின்றனர்.

சாஸ்திர ஆராய்ச்சியிலேயே பாடுபடுகின்ற சில மஹாபண்டிதர்கள் அவைகளைப்பூராவாயும் முன்பின் எடுத்துக்காட்டினால் வைதிகமார்க்கத்திலிருந்து நழுவி சாஸ்திரமொருபுறமிருக்கட்டும். தற்காலத்திற்கு ருதுமதீவிவாஹம்தான் சாலச்சிறந்தது. அப்படி அனேககாரியங்கள் சாஸ்திரத்தில் அறிவிக்கப்படுவதை அங்கீகரித்துக்கொண்டால் ஸ்வயராஜ்யம் கிடைக்காதென்று காங்கிரஸ் கக்ஷிக்காரர்கள் செப்புகின்றனர். அவர்களை இவ்வாறு கேட்போம். ஸ்வயராஜ்யமென்றால் என்ன? தேசலாபம் என்றார்களானால் தேச விஷயத்தில் ஒற்றுமையாயிருக்கவேண்டிய விஷயத்தில் தர்ம விரோதமாக இல்லாமலிருந்தால் யாவரும் ஒற்றுமைப்பட்டவர்களே.

பகவான் பிராணிகள் ஒவ்வொன்றினுமே அறிவில் ஏற்றத் தாழ்ச்சியை அவரவர்களின் கன்மாவுக்குத் தக்கபடி அளித்திருக்கிறார். விசேஷமாக மானிடப்பிறவியில் விவேகத்தை அதிகமாக அளித்திருக்கிறார். அதோடு நில்லாமல் தர்மாதர்ம வியவஸ்தையை வேதசாஸ்திரங்களால் வெளியிட்டிருக்கிறார். கண்ணுக்குப் புலப் படாதவிஷயங்களை அறிவதற்குச் சாஸ்திரமே கண்ணாகின்றது. அக்கண்ணால் ஏற்படுகிற ஸ்வயராஜ்யம்தான் பெரிதானது. அவ் விஷயத்தில் நாம் ஒழுங்கினையில்லாமலிருந்தால் நச்வரமான ஸ்வய ராஜ்யம் அடைவதில் யாது பயன்?

இவ்வுலகில் எத்தனை ஜனங்கள் தரித்திரர்களாயும் ரோகிகளா யுமிருப்பதைக் கண்கூடாகப்பார்க்கிறோம். அவர்கள் அநுபவத் தில் என்ன சொல்லுகின்றனர். ஈசனே இந்த உலகவாழ்க்கையில் ஜனன மரண ப்ரவாஹத்தில் புழுக்கள்போல்ச்சுழலும் எங்களைக் கரையேற்றி மோக்ஷமென்கிற கரையில் சேர்க்கக்கூடாதா என் றல்லவோ சொல்லிப் புலம்புகின்றனர். அவர்களைப்பார்த்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியது என்ன? ஈச்வரனுடைய ஆஞ்ஞை யான வேதப்பிரமாணத்தை நம்பி அதன்படி ஒழுகி, மோக்ஷத்தை யடைய யத்தனிப்பதல்லவோ முக்கியமென்று ஏற்படுகிறது. இவ் வைதீகத்துறையில் இறங்காமல் சாஸ்திரவிரோதமாக ருதுமதீ விவாஹம், சண்டாளர்களின் ஆலயப்பிரவேசம் என்று ஓய்வில்லா மல் பத்திரிகைகளில் எழுதுவதால் அவர்கள்நாடும் ஸ்வயராஜ்யம் ஏற்படப்போகிறதில்லை. ஆனாலும் கலிகாலமென்று சொல்வதை ஆதாரமாகக்கொண்டு தோன்றினபடியெல்லாம் பிதற்றத்தலைப்படு கின்றவர்களுக்கு அனேக பத்திரிகைகள் இடங்கொடுக்கின்றன. பிரமாண நூற்களை எடுத்துரைப்போருக்குஅப்பத்திரிகைகள் இடங் கொடாமலிருக்கின்றன என்பதே கலிகால கோலாஹலமெனச் சொல்வதற்குப் போதுமான அத்தாக்ஷி.

ஸனாதனமான வைதிகமதத்தை அழித்துவிடலாமென்று கோருவதோடு நில்லாமல் ஸனாதன தர்மிகளுக்கு இடையூறுகளைச் செய்து இஷ்டத்தைசாதிக்கும்படிச்செய்துவிட்டோமென்று கூறு கின்றவர்கள் தன் முன்னோரின் பெருமையை உணர்ந்தாரில்லை. காலசக்கிரம் தற்காலம் அதிநியாய் உருண்டுவருகிறது. ஸரியான வழியில் செல்லாமல் காலசக்கிரம் பெரும்பள்ளம்போன்ற நரகக்

குழியில் தள்ளிவிடுகின்றது. ஆனாலும் காலச்சக்கிரம் மனம் போனபோக்காகச் சுற்றுகிறபடியால் அறிஞர்கள் மனதை வைதிகப்பிரமாணத்தால்நிலைநிறுத்திவிட்டால் அவைகளுக்கு அது வசப்பட்டு மேன்மேலும் சமமான வழியாய் சுற்றிக்கொண்டு அடைய வேண்டிய அழிவில்லாத பேரானந்த வழியிலேயே நின்றுவிடுகிறது. மனதைக் களங்கமறச் செய்துகொண்டபடியினாலேயே நமது முன்னோர்கள் பெருமையுடன் உலகில் வாழ்ந்து நல்ல நீதிகளை மக்களுக்குக் கற்பித்து விண்ணுலகமேகினார்கள்.

கலிகாலகோலாஹலத்தால் அம்முன்னோரை அறிவீனர்கள் என்றும் மேல்நாட்டு நாகரீகத்தில் பழகின தாங்களே அறிவாளிகள் என்றும் தங்களைத் தாங்களே பத்திரிகைகளில் எழுதிச் சிறப்பித்துக் கொள்ளுகின்றனர்.

நம் முன்னோர்கள் வேதப்பிரமாணப்படி ஒழுகி தங்களது பெயரை எங்கும் பரவச்செய்தனர். பிராம்மணஜாதியில் பிறந்தோம் என்று சொல்லிக்கொண்டு ஜாதி மாத்திரம் பிராம்மணர்களாகச் சொல்கின்றவர்களும் தாங்கள்நிர்ப்பந்தம் நேர்ந்த காலத்திலாவது பெரியோருக்கு அபிவாதனஞ் செய்யும்போது அந்த வாக்கியத்தில் கூறப்படும் முன்னோர்களின் பெயரை சற்று கவனித்தார்களானல், இக்கலிகாலகோலாஹலம் தளர்ந்துவிடும். மேல்நாட்டு நாகரீகத்தைக்கைக்கொண்டவர்களின் எண்ணம் எதுவுமே ஒரு நிலைக்கு வாராது. அவர்கள் ஊஹித்துப்பேசத் தலைப்படுவது விந்தையிலும் விந்தையாயிருக்கிறது.

வேதங்கள்தான் ஏன் விண்வசனங்களாய் இருக்கக்கூடாது? தர்மாதர்மங்களின் நிலையை கடவுள் தான் ஏன் மறந்துவிடக்கூடாது? யமன் என்று ஒருவன் இருக்கிறான் என்பதும் ஏன் பொய்யாக இருக்கக்கூடாது? என்று பலவிதமாய் உல்லேகஞ் செய்துகொண்டு சரீரபுஷ்டியுள்ளகாலத்தில் மனக்களிப்புடன் எங்கும் பேரானந்தங் கொண்டவர்கள்போல் திரிகின்றனர்.

(தொடரும்)

K, V. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,